**கொடகவெல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கொடகவெல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 மே 26 வரையும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாத கைத்தொழிலொன்றிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 2,959,079 கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | குறித்த கைத்தொழிலிற்காக மட்டுப்படுத்தப்பட்ட விலைமனு கோரலின் கீழ் விலைமனு பெற்றுள்ளதாகவும், தொழிநுட்ப ஆய்வுக்குழு பரிந்துரையிற்காக உள்ளூராட்சி பொறியியலாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் முன் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட, பெறுமதி ரூபா 2,108,635 ஆன 02 கைத்தொழில்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய நடைமுறையல்லாத சொத்து அதிகரிப்பு மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டு கணக்கு தயாரிக்கையில் மூலதனமாக்குவதாக அறிவிக்கிறேன். |
| (இ) | கழிவுப்பொருள் களஞ்சிய மத்திய நிலைய நிர்மாணக் கிரயம் மூலதனமாக்கப்பட்டு இருக்கையில் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 550,000 வை மூலதன செலவாக கணக்கீடு செய்ததன் காரணமாக ஆண்டின் மூலதன செலவு அப் பெறுமதியால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கைத்தொழிலிற்குரிய செலவுகள் மற்றும் முற்பண தீர்வு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கருத்திட்ட வேலைகளை பூர்த்தி செய்து இறுதி கொடுப்பனவின் போது அனைத்து கொடுப்பனவுகளையும் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடந்த ஆண்டிற்குரிய கடன்கொடுனர் மிகை ஏற்பாடு ரூபா 306,383 இனை கணக்குகளில் செம்மையாக்கியிருக்கவில்லை. | கடன்கொடுனர் மிகை ஏற்பாடு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டு கணக்கு தயாரிக்கையில் கடன்கொடுனர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |
| (உ) | வங்கி மீதி உறுதிப்பாட்டிற்கு அமைய மீளாய்வாண்டு இறுதியில் நிலையான வைப்பு பெறுமதி ரூபா 12,877,742 ஆன போதும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 12,570,092 எனக் காட்டப்பட்டதால் ரூபா 307,650 ஆன வித்தியாசம் நிலவியது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் பெறுமதிகள் உறுதிப்படுத்தல் பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறித்த தவறுகளை சீராக்கி கணக்கு தயாரிக்குமாறு விடய அலுவலரிற்கு ஆலோசனை வழங்கியதாக அறிவிக்கிறேன் |

## 1.4 இணங்காமை

----------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 571 | கூட்டுத்தொகை ரூபா 734,779 ஆன காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் வரும் ஆண்டில் இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 4.3 பந்தி | சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் நியாயமான தன்மை தொடர்பாக தகையுடைய இயந்திரவியல் பொறியியலாளர் ஒருவரின் அறிக்கையை பெற்றுக் கொள்ளாது ரூபா 707,290 செலவில் பெகோ இயந்தரமொன்றும் கெப் வண்டியொன்றும் பழுதுபார்க்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் பழுதுபார்த்தல்களின் போது விலை மனுக்களில் நியாயமான தன்மை தொடர்பாக அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,637,639 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,754,407 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 6,177,172 | 6,112,142 | 6,283,514 | 3,095,327 | 6,853,464 | 6,474,707 | 6,000,039 | 3,821,378 |
| (ii) | வாடகை | 10,287,881 | 9,193,405 | 9,173,523 | 572,020 | 7,682,640 | 8,293,506 | 8,175,115 | 269,543 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,815,200 | 1,580,136 | 1,590,598 | - | 1,611,200 | 1,821,562 | 1,819,199 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 23,589,982 | 23,896,676 | 35,474,542 | 19,364,418 | 12,948,536 | 13,881,927 | 29,884,906 | 14,761,666 |
| | | **41,870,235** | **40,782,359** | **52,522,177** | **23,031,765** | **29,095,840** | **30,471,702** | **45,879,259** | **18,852,587** |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான ரூபா 2,857,308 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் 03 வருடங்களை விஞ்சிய காலபகுதியிலிருந்து நிலவி வரும் கூட்டுத்தொகை ரூபா 1,330,680 உள்ளடங்கியிருந்தது. அந் நிலுவை மீதியை அறவிட 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையிற்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டினுள் நடமாடும் வேலைத் திட்டம் மற்றும் ஆதனத் தடையின் மூலம் நிலுவையின் ஒரு பகுதி அறவிடப்பட்டதாகவும், எஞ்சிய நிலுவை மீதி அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 கடையறைகளிற்குரிய 05 ஆண்டுகளை விஞ்சிய காலத்திலிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 100,063 தொகையை அறவிட்டிருக்கவில்லை | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்கவும், அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கடையறைகளின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமலிருந்ததனால் மகா சபைக்கு சமர்ப்பித்து அத் தொகையை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கான உத்தேசம் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அத் தீர்மானம் ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**2.2.4 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசம்பர் 31 திகதியன்று பெறவேண்டியதாக இனங்காணப்பட்ட நீதிமன்ற தண்டபணம் ரூபா 8,312,159 ஆனதுடன், முத்ரைக் கட்டணம் ரூபா 8,577,052 அனது. | சபையிற்கு அறவிட வேண்டிய வருமானத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரைக் கட்டணம் தற்போது கிடைத்துள்ளதாகவும், நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.5 அனுமதிப்பத்திர கட்டணம்**

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டியதாக இனங்காணப்பட்ட 10 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன், 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் புதுப்பிக்க வேண்டிய 09 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படாததால் சபையிற்கு ரூபா 76,000 தொகையான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களுக்கும் உரிய முறைமைக்கு இணங்க அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுமாறு உரிய வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். |

### 2.3 விளம்பர பலகை கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகாரி எல்லையினுள் காட்ச்சிப்படுத்தப்பட்டிருக்கும் விளம்பர பலகைகளை இனங்காண கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், 03 நிரந்தர விளம்பர பலகைகள் தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 81,487 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | சபையிற்கு அறவிட வெண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணம் அறவிடல் தொடர்பாக இது வரையும் பலமுறைகள் குறித்த நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் நிலுவை மீதியை விரைவாக அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி மற்றும் மக்களுக்கு வழங்கும் நலன்புரி வசதிகளை மேம்படுத்தல் தொடர்பான முன்மொழிவுகள் எதுவும் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டினுள் செயற்படுத்த எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகள் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அதிகார எல்லைக்குரிய அபிவிருத்தி முன்மொழிவுகள் மற்றும் நலன்புரி சேவைகள் உள்ளடக்கப்பட்டு தயாரித்துள்ளது என அறிவிக்கிறேன். |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த | 2020 ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

| | | |
|---|---|---|
| குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | வேண்டும். | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவை இடைநிறுத்தல், சேவையிலிருந்து விலகுதல், மரணித்தல் மற்றும் இடமாற்றம் காரணங்களால் 02 வருடங்களிற்கும் 20 வருடங்களிற்கும் இடையிலான காலத்திலிருந்து நிலுவையாகவுள்ள 05 அலுவலர்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 61,798 ஆன நிலுவை கடன் மீதியை அறவிட்டிருக்கவில்லை. | குறித்த கடன் மீதிகளை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக அறிவிக்கிறேன். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் இனங்கண்டிருந்த 04 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற அல்லது சட்டரீதியாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இனங்காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களின் உரிமையாளர்களிற்கு குறித்த அனுமதியற்ற நிர்மாணங்களை சட்டரீதியாக்கிக் கொள்ளுமாறு அறிவித்துள்ளதாகவும் அவர்களால் தற்போது அதற்கு தேவையான விண்ணப்பங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்த வேண்டிய நிலையிலுள்ள 03 ஆண்டுகளை விஞ்சிய காலமொன்று ஓட்டத்தில் ஈடுபடுத்தாத இரண்டு டெக்டர்களை திருத்தியிருக்காததுடன், அதில் ஒரு டெக்டரிற்கு 2018 மே மாதம் ரூபா 27,300 செலவில் மீட்டர் போட் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தது. | வாகன திருத்த வேலைகளை நாளாதுவரையாக மேற்கொள்ள வேண்டும். | இரண்டு டெக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள் சந்தையில் இல்லாததனால் திருத்த முடியாது இருந்ததாகவும், தற்போது அவ் உதிரிப்பாகங்கள் சந்தையில் உள்ளதனால் திருத்த வேலைகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட கெப் வண்டியொன்றை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விளைவற்ற சொத்துக்கள் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பராதீனம் செய்ய வேண்டிய கெப் வண்டி தொடர்பாக நியமிக்கப்பட்ட கணிப்பீட்டுக் குழு தலைவராக செயற்படும் கொடகவல பிரதேச செயலக அலுவலரை பெயரிட்டு அனுப்பியதன் பின் பராதீன நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன் |

**3.5 பெறுகைகள்**

**வழங்கல் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 மார்ச் மாதம் ரூபா 84,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 3000 கழிவு உறைகளை அச்சிட அச்சக நிறுவனமொன்றிற்கு ரூபா 195,000 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவற்றின் மொத்த செலவு ரூபா 279,000 ஆனது. எனினும் 2019 ஏப்ரல் மாதம் 9000 அச்சிட்ட உறைகளை ரூபா 292,500 இற்கு அந் நிறுவனத்திடம் இருந்தே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திட்டமிட்ட அடிப்படையில் செயற்படாததால் மார்ச் மாதம் கழிவு உறைகளை கொள்வனவு செய்கையில் ரூபா 181,500 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | கருத்திட்டம் செயற்படுத்துகையில் பொருளாதார ரீதியாக மற்றும் பயனுறுதி தொடர்பாக கவனம் செலுத்தி திட்டமிட்ட அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உறைகளை அச்சிட்டு வழங்க குறைந்த பட்சம் 7000 உறைகளிலும் அதிகமாக கொள்வனவு செய்ய வேண்டுமென குறித்த நிறுவனம் குறிப்பிட்டதால் ஆரம்பத்தில் அச்சு வேலைகளை வேரொரு நிறுவனத்திடம் செய்து கொள்ள வேண்டி ஏற்பட்டதாகவும் பின்னர் பெறுமளவு உறைகள் தேவைப்பட்டதால் அச்சிட்ட உறைகளை ஆரம்ப நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்ததாகவும் அறிவிக்கிறேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவை கடை வாடகை காரணமாக இறக்வான வியாபார கட்டிடத் தொகுதியில் 02 கடையறைகளை 2007 மற்றும் 2015 ஆண்டுகளில் சபைக்கு மீண்டும் சுவீகரித்திருந்த போதும் அத்தினத்தில் காணப்பட்ட நிலுவை கடையறை வாடகை ரூபா 78,285 இனை அறவிட அல்லது குத்தகைகாரரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கடையறைகளின் சட்ட ரீதியான உரிமையை உறுதி செய்து கொள்ள முடியாதிருந்ததால் மகா சபைக்கு சமர்ப்பித்து அத் தொகையை ஏடுகளிலிந்து பதிவழிக்கும் உத்தேசம் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அத்தீர்மானத்தை ஆளுனரின் அங்கீகாரத்திற்கு முன்வைத்துள்ளதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நீண்ட காலமாக தீர்க்கப்படாத முற்பணங்களில் உள்ளடங்கியுள்ள ஊழியர் நம்பிக்கை நிதிய சபைக்கு கொடுப்பனவு செய்த மிகைஅறவீடு ரூபா 37,866 ஆன மிகை அறவீட்டு தொகையிற்கு பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகை அறவீட்டுத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இத் தொகையை சபை நிதியத்திலிருந்து செலுத்த சபையின் அனுமதியை பெற்றுக் கொண்டதாகவும் அதனை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு முன்வைத்துள்ளதாகவும் அறிவிக்கிறேன். |
| (இ) | சபைக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் சுடுகாடுகளிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 37 காணிகளின் உரிமையை முறையாக சுவீகரித்துக் கொள்ள இயலாமலிருந்தது. | பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி காணிகளின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலாளரிடம் பல தடவைகள் கோரிய போதும் இது வரையும் அச் சுடுகாடுகளின் உரிமையை ஒப்படைக்கவில்லை என அறிவிக்கிறேன். |